# அன்பு மக்களே!

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு பங்குனி 2026 ஒளி 32 கதிர் 313

TAMIL CATHOLIC PUBLICATION MARCH 2026 YEAR 32 VOl: 313




கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்.

CTC NETWORK : https://ctcnw.org/

**ஸ்தாபிதம்**

ஆனி 1995

**முகவரி**

41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4 CANADA.

**Email :** tamilcatholicpublication@gmail.com

Webside :**https://ctcnw.org/**

**தோலை பேசி :**

+1(647) 852-3141

**தயாரிப்பு + வெளியீடு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**

திரு தோமஸ் டேவிட்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**

அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா

அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்

அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**

திரு மரியதாஸ்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

தன்னார்வத் தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்**

**ரொறொன்ரோ**

புனித அந்தோனியார் தேவயலயம்

புனித லூர்து மாதா தேவாலயம்

புனித ரோசா லீமா தேவாலயம்

புனித பர்னபாஸ் தேவாலயம்

புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**

தோமாஸ்மோர் தேவாலயம்

போனிபஸ் தேவாலயம்

**டொன்மில்ஸ்**

புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு

தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்

மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்




# கனடா தமிழ் கத்தோலிக்க இணையத்தின் அறிவிற்கும் ஆன்மீகத்திற்குமான

## ஐரோப்பிய திருப்பயணம்

ஐரோப்பிய திருப்பயணம் வைகாசி (Month of May), மாதம் 02ம் திகதி ஆரம்பித்து வைகாசி மாதம் 22ம் திகதி முடிவடையும். வத்திக்கான் நகரில் ஆரம்பித்து பிரான்ஸ் ஸ்பெயின் ஊடாக வந்து இறுதியில் போர்த்துக்கல் நாட்டில் நிறைவடையும்.

அடுத்த நாள் 03ம் திகதி வத்திக்கான் நகரை தரிசித்தல் : கத்தோலிக்க திருச்சபையின் உலக புகழ்பெற்ற சரித்திரம் வாய்ந்த அதிசயங்களை தரிசித்தல்

பின் பரிசுக்கு சென்று வெள்ளைத்தேவாலயம், நெப்போலியன் நூதனசாலை மற்றும் புனித பெனடிக்ற்றம்மாவின் ஆலயத்தை பார்வையிடல்.

லூர்து நகருக்கு சென்று தூய தண்ணீரில் மூழ்கி எழுந்து குணம் பெறும் நிகழ்வில் பங்கெடுத்தல்.

## ஸ்பெயினுக்கு சென்று

புனித அந்தோனியார் தனது குருத்துவ கல்வி பயின்ற குருமடத்தை பார்வையிடல்

புனித யாகப்பரின் திருத்தலம் மற்றும் புனித சந்தியாகு தேவாலயம் பார்வையிடல் (Spain)

புனித பாத்திமா அன்னையின் தேவாலயம் தரிசித்தல்

பின் பற்றிமா மாதாவை தரிசித்துவிட்டு லிஸ்பன் நகருக்கு சென்று புனித அந்தோனியார் தேவாலயத்தை தரிசித்த பின் வைகாசி மாதம் 22ம் திகதி ரொறொன்ரோவுக்கு திரும்புவோம்.



கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் பங்குனி மாத ‘‘அன்பு மக்களே’’ சஞ்சிகையை திருஅவையின் 2026 தவக்கால இயல்புகளோடு வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அன்பு மக்களே! இவ் ஆசிரியர பகுதியில், இம்முறை திருஅவையின் ஒரு முக்கிய ஆன்மீகத்தை உடைத்து தர விரும்புகின்றேன். அதாவது

தவக்காலத்தின் ஆறு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கூட திருஅவை கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவையே கொண்டாடுகிறது என்பதை திருஅவையின் 2026-YearA திருவழிபாடு நாட்காட்டியின் தவக்கால ஞாயிற்றுக்கிழமைகளின் திருப்பலி நற்செய்தி வாசகங்களின் ஒளியில் நாம் காண்கின்றோம். முதல் ஞாயிறு: பாலைவனத்தில் இயேசுவை போல (மத்தேயு 4:1-11), உபவாசம், ஜெபம் செய்யவும் மற்றும் சோதனையை வெல்ல அனைத்து சோதனைகளையும் வென்ற உயிர்த்த ஆண்டவரின் நம்பிக்கையை எமக்கு வழங்கவும், இரண்டாம் ஞாயிறில் இயேசுவின் உயிர்ப்பின் முன் சுவையை தந்து எம்மை மகிமைக்குள் கொண்டுவந்து திடப்படுத்த இயேசுவின் உருமாற்ற நிகழ்வை எமக்கு தந்தும் (மத்தேயு 17:1-9), மூன்றாம் ஞாயிறில் கிணற்றில் சமாரியப் பெண்ணுக்கு (யோவான் 4:5-42) - இயேசு தன்னை உயிருள்ள தண்ணீராக வெளிப்படுத்திய நிகழ்வின் மூலம் எம்மை திடப்படுத்தவும், நான்காவது ஞாயிறில் குருடனாகப் பிறந்த மனிதனின் (யோவான் 9:1-41) குருட்டுத்தன்மையைக் குணப்படுத்திய நிகழ்வின் மூலம், நாம் உயிர்ப்பின் மகிமையை காண, மனம்மாறி, எமது அகக்கண்களை திறந்திட நம்மை அழைப்பதும், ஐந்தாம் ஞாயிறில் இலாசரசை எழுப்புதல் மூலம் (யோவான் 11:1-45) ‘‘நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாகவும் இருக்கின்றேன் என்ற இயேசுவின் வார்த்தைகள் மூலம் எம்மை திடப்படுத்தவும், ஆறாவது ஞாயிறில் (பாம் ஞாயிறு): நாம் நமது துன்ப துயரங்களை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு வாழ, துன்பம், மரணம் நோக்கிய இயேசுவின் பேரார்வமும், அவரது வெற்றிகரமான நுழைவும் எமக்கு மனத்திடனையும் நம்பிக்கையையும் தருகின்றமையும் குறிப்பிடதக்கது (மத்தேயு 26:14—27:66).

இந்த நற்செய்தி வாசகங்கள் பாவத்தின் வனாந்தரத்திலிருந்து உயிர்த்தெழுதலின் ஒளியை நோக்கி வழிநடத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அன்பு மக்களே! இனிவரும் தவக்காலங்களில், தவக்கால முன்னோடியாக, வழிகாட்டியாக திருஅவை தருகின்ற தவக்கால ஆறு ஞாயிற்றுக்கிழமைகளையும் செவ்வனே பின்பற்றி, தவக்காலத்திலும் சரி, எமது தனிப்பட்ட வாழ்விலும் சரி, எமது வாழ்வில் வருகின்ற துன்ப துயரங்களை எதிர்கொண்டு, வென்று, உயிர்ப்பின் மக்களாக சாட்சி பகர அழைத்து நிற்கின்றேன். எமது வாழ்வின் வலிகள், வாழ்வுக்கு வழிவிட துன்புறும் இயேசுவிடம் வரம் கேட்போம்.

இன்று உலகளாவிய ரீதியில் நிகழ்ந்தேறுகின்ற யுத்தங்கள், கலவரங்கள், இதனால் பல நாடுகளில் எழுந்துள்ள மரண ஓலங்கள், படடினிகள், வரப்போகின்ற பொருளாதார நெருக்கடிகள், இடம்பெயர்வுகள் மூலம் மக்கள் நம்பிக்கையிழந்து, வாழ வழியின்றி மனதளவிலும், உடலளவிலும் நடைபிணங்களாக செய்வதறியாது வாழ்கிறார்கள். இந்த போர்கள் முடிவுக்கு வர, சம்பந்தப்பட்ட நாடுகளின தலைவர்கள் போர்களை கைவிட்டவும், முன்புறும் மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழி பிறக்கவம் துன்புறும் இயேசுவிடம் ஜெபிப்போம். அகில உலகிற்கும் ஆயுதற்ற அமைதி கிடைக்கட்டும். **(அன்புடன் ஆசிரியர் டேவிட் தோமஸ்)**




தவக்காலம் வெறும் நாற்பது (40) நாட்கள் மட்டும் நல்ல கிறிஸ்தவர்களாக வாழ நம்மை அழைக்கும் காலம் அல்ல. அது நமது ஆயுடக்காலம். நமது ஆயுடக்காலம முழுவதும் நல்ல கிறிஸ்தவர்களாக, ஆண்டவர் இயேசுவுக்கு மிகவும் பிரியமான பிள்ளைகளாக வாழ நம்மை பயிற்றுவிக்கும் காலம். அதற்கு தேவையான முயற்சியும், பயிற்சியும் எடுக்கும் காலம் தான் தவக்காலம். நாற்பது (40) நாட்கள் நான் நல்லவனாக நல்லவளாக வாழ்வேன். பயனற்ற வாரத்தைகள், தீய பேச்சுகள் பேசமாட்டேன், தவம் செய்வேன், பரிகாரம் செய்வேன், அதிகமாக ஒறுத்தல் முயற்சிகள் செய்வேன் (பாத்திமா புனித ஜெசிந்தா, புனித பிரான்சிஸ், லூசியா, மற்றும் புனித குழந்தை தெரசம்மாள் போல). ஆண்களில் பலர் புகைக்க மாட்டேன், 40 நாட்கள் குடிக்கமாட்டேன், பெண்களில் பலர் டிவி சீரியல்கள் பார்க்கமாட்டேன்(???) பொதுவாக தொலைக்காட்சியில் சினிமா, பாடல்கள் பார்க்கமாட்டேன், 40 நாட்கள் மாமிசம் சாப்பிடாமல் இருப்பது, புலன்களை அடக்குவது, சண்டை சச்சரவுகள் செய்யாமல் இருப்பது, என்று இருந்து விட்டு ஈஸ்டருக்கு பின் முன்னையதைவிட அதிகமாக அனைத்து காரியங்களையும் செய்வேன். தவக்காலத்திற்கு பின் விதிவிலக்கு கொடுத்துவிடலாம், மற்ற கெட்ட பழக்கங்கள் நிரந்தரமாக நிறுத்திவிடலாம் என்றால் இந்த தவக்காலமே நமக்கு தேவையில்லை. மாற்றங்கள் வேண்டும், பழைய வாழ்விலிருந்து முன்னேற்றம் வேண்டும். இறைவனை நோக்கி தவக்காலத்தில் எடுத்த நல்ல முடிவுகள் பின்பற்றப்பட வேண்டும். ஆண்டவரை நோக்கி ஒரு அடியாவது எடுத்து வைக்க வேண்டும். எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிடக்கூடாது. எல்லா நாளுமே நாம் நன்றாக இருந்துவிட்டால் தவக்காலங்களில் கஸ்டங்கள் இருக்காது.

நாம் இன்னும் பலவிதமானபாவங்கள், பாவ நாட்டங்களை மனதிற்குள் வைத்துக்கொண்டு தான் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

அதை ஒவ்வொன்றாக அடையாளம் கண்டு அவைகளை வெளியேற்ற வேண்டும். உள்ளத்தில் இருக்கும் நாற்றங்கள் வெளியேற வேண்டும். உள்ளத்தை நன்றாக கொத்தி பாத்தி கட்டி மணம் வீசும் மலர் உள்ள செடிகளை விதைக்க வேண்டும். அவைகள் வளர்ந்து மணம் வீசும் மலர்கள் அங்கே பூக்கும். நம் ஒவ்வொருவர் உள்ளமும் குழந்தைகள் உள்ளமாக மாறினால், குழந்தைகள் சிரிப்பை கேட்டு பூக்கள் பூப்பது போல் நம் உள்ளத்திலும் ஒவ்வொரு முறையும் பூக்கள் பூத்துக்கொண்டே இருக்கும்.

கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தி நம்மை மீட்டு இரட்சித்த ஆண்டவர் இயேசுவிற்காய் நாமும் நம் பாவங்களை முழுயையாக விட்டு விடுவோம். ஞானஸ்நான வழிபாட்டில் நம்மிடம் குருவானவரால் கேட்கப்படும் கேள்வியை இப்போது நம் இயேசு நம்மை பார்த்து கேட்கிறார்.

பசாசையும் அவன் கிரியைகளையும் அவன் ஆரவாரங்களையும் முழுமனதோடு விட்டுவிடுகிறாயா? என்று ஆண்டவருக்காக நாம் என்ன பதில் சொல்ல இருக்கிறோம்.

இயேசுவின் உயிருள்ள வார்த்தையான “என்னைப் பின் செல்”என்ற வார்த்தைக்கு உடனே கீழ்படிந்து எதைப்பற்றியும் யோசிக்காமல் தந்தையையும் வலைகளையும் விட்டு பின் சென்ற புனித சந்தியாகப்பர் (பெரியயாக்கோபு) புனித அருளப்பரைப்போல் நாமும் இந்த உலக கவர்ச்சி மாயைகளை யோசிக்காமல் தூக்கி எரிந்துவிட்டு நம் ஆண்டவர் இயேசுவை முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் முழு

வலிமையோடும் பின் செல்ல தயாராய் இருக்கிறோமா? சிந்திப்போம்.

அதற்காக இந்த தவக்காலத்தில் நம்மை தயாரிப்போம். பயிற்ச்சி எடுப்போம். அதை செயல்படுத்துவோம். நம் வாழ்நாள் முழுவதும் நல்ல மனித நேயமுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

(தோமஸ் டேவிட்)




நாம் தவக்காலத்தில் இருக்கிறோம். எதற்காக இந்த தவக்காலம்? ஆண்டவர் இயேசுவின் பாடுகளையும் அவர் சித்தத்தையும், திருவுளத்தையும் அறியவும், நம்மை ஆதி நிலைக்கு கொண்டு வரவும் அவர் அன்னையின் வழியாக இறங்கி வந்தார். நம்முடைய இதய கதவுகளை திறப்பதுதான் அர்ப்பணம். நம் ஆவி, ஆன்மா, சரீரம், இதயம் இவை யாவற்றையும் தேவனுடைய சாயலாக மாற்றுவது தான் மனமாற்றம், அர்ப்பணம். எனவே அர்ப்பண முயற்சி என்பது மாதாவின் வழியாக இயேசுவோடு ஒன்றிக்கும், உறவாடும் ஞான நன்மையாக ஆன்மீக திருவிருந்தாக அமைகிறது. இதன் வழியாகவே நீங்கள் உங்கள் பழைய மனித இயல்பை களைந்தவிட்டு, புதிய மனிதனாக மாறி விண்ணக மணிமுடியை பெறுவீர்கள், மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று திரு அவை கூறுகின்றது. நற்செய்தியின் முழுமைக்கு உங்களை அழைத்து செல்ல விரும்புகிறேன் என்று எம் அன்னை மரியாள் கூறுகின்றாள்.

முதலாவதாக நாம் ஆவலுடன் தேட வேண்டியது, நம் ஆன்மாவின் நிறைவை நோக்கி வாழுகின்ற விருப்பம் ஆகும். இந்த ஆவல் இருந்தால்தான் பரிசுத்தத்தை பெற முடியும். மனமாற்றத்தோடு கூடிய அர்ப்பணம் மாதாவின் இருதயத்தின் வழியாக நமக்கு நிறை நிலையை பெற்றுத்தருகின்றது. அதுவே இறைவனுடைய சித்தத்தையும் திருவுளத்தையும் அறிய உதவியாக அமைகிறது, (உரோ:12:1,2). இன்றைக்கும் பலர் ஏதேன் தோட்டத்தில் ஏவாளின் கரத்தை பிடித்து கொண்டு அந்த மரத்தின் கனியை (உலகம்) உற்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்களேத் தவிர, வியாகுல அன்னையின் கரத்தை பிடித்து சிலுவையை தழுவும் நோக்கம் யாருக்கும் இல்லை. அன்னை மரியாளின் துணையின்றி ஆண்டவரையோ, பரிசுத்த ஆவியானவரையோ அடையலாம் என்றால் அது நடக்காத காரியம். ஆண்டவர் இயேசுவின் இருதயத்தோடு அன்னை மரியாளின் இருதயம் பின்னிப்பிணைந்து கிடக்கிறது. இயேசு பட்டபாடுகளை அன்னை மரியாளும் பட்டாள்.

வாழ்க்கை முழுவதும் தவக்காலம்தான் என்ற எண்ணத்தோடு நற்கருணை ஆண்டவருக்கு முன் மரியாளின் கரத்தை பிடித்துக் கொண்டு வாழ்நாள் எல்லாம் உட்காருவோம். நாட்களை தள்ளிபோடாதீர்கள். இன்றே மீட்புநாள். அடுத்த விநாடி நம் கையில் இல்லை. நம் உயிரையும், வழிகளையும் தம் கையில் வைத்திருக்கின்ற ஆண்டவர் இயேசுவோடு மாதாவின் மாசற்ற இருதயத்தின் வழியாக செல்வோம். மரனத்தை தகுதியோடு சந்திப்போம். வாழ்வை ஆதாயமாக்கிக்கொள்வோம்.

**கனிஷியா ஜேராச்**






**குருத்தோலை ஞாயிறு முதல் உயிர்ப்பு ஞாயிறு வரை, இயேசுவின் வெற்றிகரமான நுழைவு முதல் அவரது துன்பம், மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் வரை அவருடன் நடந்து செல்லும் ஒரு ஆழமான பயணமாகும்.** இது இயேசுவை ஒரு பணியாளனாகிய அரசனாக எடுத்துக்காட்டுகிறது. அவரது தியாகம் என்பது மனிதகுலத்தை கடவுளுடன் இணைக்கின்ற ஊதியமாக நியாயம் பெறுகின்றது. மேலும் விசுவாசிகளுக்கு நீடித்த நம்பிக்கையையும் சக்தியையும் வழங்குகிறது, துன்பத்தை வெற்றியாக மாற்றுகிறது.

குருத்தோலை ஞாயிறு: ஒரு பணியாளனாகிய அரசன் (மத்தேயு 21): இயேசு எருசலேமில் ஒரு கழுதையின் மீது அமர்ந்து நுழைகிறார். ஒரு போர்க்குதிரையின் மீது அல்ல, பணிவு மற்றும் அமைதி மூலம் சக்தியை மீண்டும் வரையறை செய்கிறார். அவர் ஒரு அரச அங்கீகாரம் பெறுகிறார். ஆனால் சேவை செய்யும் அரசராக.

புனித வியாழன்: பணியாளன் தலைமைத்துவம் (யோவான் 13): இயேசு சீடர்களின் கால்களைக் கழுவுகிறார், சேவையில் மகத்துவம் காணப்படுகிறது என்பதை நிருபிக்கிறார். அவர் புதிய உடன்படிக்கையை நிறுவி, அனைவரையும் தனது பந்திக்கு அழைக்கிறார். அன்பும் பணிவும் சீடத்துவத்திற்கு மையமானது என்று கற்பிக்கிறார்.

புனித வெள்ளி: துன்பத்தை அனுபவிக்கும் இரட்சகர் இயேசு (யோவான் 11): சிலுவையில் இயேசுவின் தியாகம், கடவுளின் அன்பு, நீதி நிரூபிக்கப்படுகின்றது. அவர் மனிதகுலத்தின் பாவத்தின் பாரத்தை சுமந்து, இருளின் கணத்தை இரக்கத்தினால் வென்றெடுக்கிறார்.



புனித சனிக்கிழமை: நம்பிக்கையுடன் காத்திருத்தல்: அமைதியையும் இருளையும் பற்றி சிந்திக்க ஒரு நேரம், கடவுள் நம்மால் பார்க்க முடியாதபோதும் செயல்படுகிறார் என்று நம்புதல்.

உயிர்ப்பு ஞாயிறு: இயேசு உயிர்த்தெி: வெறுமையான கல்லறை இயேசு உயிர்த்துவிட்டார் என்பதை நிருபிக்கிறது. உயிர்த்தெழுதல் நம்பிக்கையை வழங்குகிறது, மரணத்தை வென்று அனைவருக்கும் ஒரு புதிய வாழ்க்கையை வழங்குகிற நாளாக அமைகிறது.

**புனித வார அழைப்பு:** மனத்தாழ்மையைத் தழுவுங்கள்: இயேசுவைப் போலவே, ஒவ்வொரு விசுவாசிகளும் மற்றவர்களுக்கு சேவை செய்ய அழைக்கப்படுகிறார்கள்.

துன்பத்தில் பலத்தைக் கண்டறியவும்: சிலுவை உயிர்த்தெழுதலுக்கு வழிவகுத்தது போல, நமது போராட்டங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை அறிந்து, கடவுளின் வல்லமையை நாம் நம்ப அழைக்கப்படுகின்றோம்..

நம்பிக்கையில் வாழுதல்: உயிர்த்தெழுதல் கடவுளின் அன்பில் நங்கூரமிட்டு, நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் எதிர்காலத்தை எதிர்கொள்ள அழைக்கன்றது.

இந்த வாரம் கூட்டத்தில் ஓங்கி ஒலிக்கும் ஓசான்ன உற்சாகத்திலிருந்து கடைசி இராப்போஷனத்தின் நெருக்கம், சிலுவையின் வலி மற்றும் இறுதியாக, வெறுமையான கல்லறையின் மகிழ்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்க இந்த புனித வாரம் நம்மை அழைக்கின்றது. (தீபா பிரின்ஸ்)




புனித வியாழன் அல்லது பெரிய வியாழன் புதிய இஸ்ராயேலாகிய கிறிஸ்தவர்கள் எம்முடைய புதிய பாஸ்கா விழா என்று அழைக்கின்றோம். அதாவது புதிய இஸ்ராயேலாகிய எம்மை இயேசு தமது பாடுகள் மரணம் உயிர்ப்பின் மூலம் பாவ அடிமைத்தன தேசத்திலிருந்து பரிசுத்த பூமியாகிய பரலோக தேசத்திற்கு உரியவர்களாக எம்மை கொண்டு சேர்த்த நிகழ்வை புதிய பாஸ்கா என்று அழைக்கின்றோம். இந்த புதிய பாஸ்கா நிகழ்வின் முன் இயேசு தமது சீடர்களோடு உண்ட இராப்போஷன உணவை புதிய பாஸ்கா உணவு என்றழைக்கின்றோம்.

பழைய ஏற்பாட்டில் பாஸ்கா விழா என்றால் கடவுள் தமது இரக்கத்தினால் பாரவோனின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் செழிப்புமிக்க, வழமான கானான் தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். இதனை கடத்தல் விழா என்றும் அழைக்கின்றோம். அதாவது பாஸ்கா என்ற கடத்தல் நிகழ்வின் வழியாகத் இஸ்ராயேல் மக்கள் பாரவோனின் அடிழமத்தனம்மிலிருந்து கடந்து வந்ததைக் குறிக்கும். இவ்வாறு இஸ்ராயேல் மக்கள் எகிப்திய பாரவோனின் அடிமைத்தனத்திலிருந்து புறப்படுவதற்கு முன்னய நாள் யாவே கட்டளையிட்ட உணவு வகைகளை இஸ்ராயேல் மக்கள் உண்டார்கள். இந்த உணவையே இஸ்ராயேல் மக்கள் பாஸ்கா உணவு என்று அழைக்கிறார்கள்.

இயேசு இராப்போஷன அப்பத்தை எடுத்து, “இதை என் நினைவாக செய்யுங்கள்” என்று “திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார்,(மாற் 14:22-25). இந்த திவ்விய நற்கருணையை உலகம் முடிவு வரை எமக்கு தருவதற்கு “என் நினைவாக செய்யுங்கள் என்று “குருத்துவத்தை” ஏற்படுத்தினார். இயேசு இராப்பேஷண உணவை உண்ணும் முன் சீடர்களுடைய பாதங்களைக் கழுவி, “நான் செய்தது போலவே நீங்களும் செய்யுங்கள்” என்று “அன்புக் கட்டளையை” ஏற்படுத்தினார்,(யோவான்13:15). இதனை தான் எமது திருஅவை, இயேசு புனித வியாழன் புதிய பாஸ்காவாகிய இராப்போஷணத்தில் “திவ்விய நற்கருணையை, குருத்துவத்தை, அன்புக் கட்டளையை” நிறுவினார் என்று கூறுகின்றது.

ஆகவே! இயேசு நித்தியத்திற்கும் எம்மோடு “இம்மானுவேலாக” பிரசன்னமாயிருக்கும் இவ் திவ்விய நற்கருணையே, கிறிஸ்தவர்கள் எமக்கு மெசியாவாகிய இயேசுவின் நித்திய இரண்டாம் வருகை ஆகும். இதனையே புனித பவுல் கூறுகின்றார், “நீங்கள் அறியாமல் ஆராதிக்கும் கடவுள்”, (தி.ப. 17:23), அதாவது, கிறிஸ்தவர்கள் நீங்கள் திவ்விய நற்கருணையில் நம்முடைய மெசியா முப்பொழுதும் பிரசன்னமாயிருக்க, எவ்வாறு அவருடைய இரண்டாம் வருகையைக்குறித்து அங்கலாய்க்க வேண்டும்.

எமது கிறிஸ்தவ விசுவாசத்தைப் புதிப்பிப்போம். இந்த புதிய பாஸ்க்காவாகிய புனித வியாளனில், திவ்விய நற்கருணை பக்தியை ஆழப்படுத்துவோம். இயேசு ஸ்தாபித்தபணிக்குருத்துவம் புதிப்பிக்கப்படவும், குருக்களின் குருத்துவ அபிஷேகம் ஆழப்படுத்தப்படவும், ஆன்புக்கட்டளையில் வளரவும் அன்பு ஆண்டவரிடம் ஜெபிப்போம்.

**ரொமேரோ**






இன்று புனித வெள்ளி. இயேசு கிறிஸ்து எமக்காக எமது பாவங்களுக்காக பாடுபட்டு பல வகையிலும் வேதனைப்பட்டு இரத்தம் சிந்தி சிலுவையில் அறையப்பட்டு தன்னுடைய உயிரையே தியாகம் செய்த நாள்.

இந்த சிலுவை சாவை பற்றி நாங்கள் இன்று விசேடமாக தியானிக்கின்றோம். காரணம் இயேசுவின் சிலுவை சாவு ஒரு இழப்பு அல்ல. அது ஒரு புதிய பிறப்பைத் தரும், எமக்கு நம்பிக்கை தரும் ஒரு அடையாளமாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்து இவ் உலகத்திற்கு வந்தது எம்மை மீட்பதற்காக. மனிதர்கள் நாங்கள் பிறக்கும் போதே சென்ம பாவத்துடன் பிறக்கின்றோம்.

ஆவ்வாறான ஒரு வரையறுப்போடு பிறக்கும் மனிதரை விடுதலை செய்து அவர்களை வாழ வைப்பதற்காக எம் மீட்பர் இவ் உலகிற்கு வந்து எமது பாவங்களுக்கு பரிகாரமாக தனது உயிரையே அவர் ஒப்புக் கொடுத்தார். பழைய ஏற்பாட்டிலே யூதர்கள் தமது பாவங்களுக்கு பரிகாரமாக, விலங்குகளை இறைவனுக்கு பலிகொடுத்தனர். ஆனால் இயேசு கிறிஸ்து இவ் உலகிற்கு வந்ததன் பின்னர் தன்னையே தியாகம் செய்து தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்து இறைவனிடம் எங்களுக்காக பாவ மன்னிப்பு பெற்றுத் தருகின்றார்.

இதன் வழியாக நாங்கள் இன்று சுதந்திரம் பெற்ற மக்களாக, ஆசிர் வதிக்கப்பட்ட மக்களாக வாழுகின்றோம். எனவே தான் நாங்கள் இந்த விதமாக மிகவும் மோசமான ஒரு மரணத்தை தனதாக்கி எமக்காக பாடுபட்டு இறந்த எமது நாயகன் இயேசுவிற்காக இந்த நாளிலே விசேடமாக நன்றி கூறி இயேசு எம்மீது கொண்டிருக்கும் அன்பிற்காக எமது பாவங்களுக்காக மனம் வருந்துவோம்.

நாங்கள் எமது குறைகள், தவறுகள், குற்றங்களினால் எத்தனையோ வகைகளில் மற்றவர்களுக்கு ஒரு சிலுவையாக இருக்கலாம். எமது வார்த்தைகளும், எமது செய்கைகளும் மற்றவர்களை தாக்கும் வகையில் அமையலாம்.

எனவே தான் இந்த பாவங்களை இந்த குறை, குற்றங்களை எமது வாழ்க்கையில் இருந்து அகற்றி இந்த சிலுவையில் எமக்காக மரணித்த இயேசுவுக்காக ஒரு புது வாழ்வு வாழ்வோம். இந்த சிலுவையில் இருந்து நாங்களும் பாடம் கற்றுக் கொண்டு அந்த நாயகன் எமக்காக எப்படி மரித்தாரோ நாங்களும் எமது பாவங்களுக்கு மரித்து இறைவனுக்காக வாழுவோம். எமக்காக ஒருவர் இறந்தார். அவருக்காக நாம் வாழ்வோம். (அன்ரனிமுத்து)




இத்தவக்காலம் இயேசுவின் 40 நாட்கள் பாலைவனத்தில் நோன்பிலும் செபத்திலும் தன்னை ஈடுபடுத்தி தனது பகிரங்க பணிவாழ்விற்கான ஆயத்தத்தை மேற்கொண்டு, அனைத்து விதமான சாத்தானின் சோதனைகளையும் மேற்கொண்டாரோ, அதே போல, நாமும் இத்தவக்காலம் முழுவதும் ஒறுத்தல்கள், உணவு கட்டுப்பாடு, ஆடம்பர மறுத்தல், சிலுவைப்பாதை, செபித்தல், தியானித்தல், வழியாக இயேசுவின் பாதையில் பயணம் செய்ய அழைக்கின்றது திருஅவை.

நிலை வாழ்வு நோக்கிய பயணத்தில் வரும் தடைகளாகிய பாவங்களை, பலவீனங்களைக், கடந்து முன்னோக்கிச் செல்ல அழைக்கும் காலம் இந்த தவக்காலம். இயேசுவின் பாடுகளைத் தியானித்து அவரது துன்பங்களோடு நமது துன்பங்களையும் இணைத்துத் துன்புறும் மக்கள் மீது அக்கறை கொள்ளவும் அவர்களுக்கு உதவவும் அழைப்பு விடுக்கும் காலம்.

இன்று நாம் அவசரமான அதிவேகமான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதையும் உடனே பெற வேண்டும், அடைய வேண்டும், அனுபவிக்க வேண்டும், என்று துடிக்கும் மனிதர்கள் எங்கும் எதிலும் அவசரம். அதுபோல அன்பும் உடனே கிடைக்குமா என்று ஏங்கும் மனிதர்கள் இன்று ஏராளம்.

காலை முதல் மாலை வரை எங்கே போகின்றோம், எதற்காக வாழ்கின்றோம், ஏன் உழைக்கின்றோம், என்று தெரியாமல் பொருட்களைத் தேடி, பணத்தை தேடி, அலையும் மனிதர்கள் மத்தியில் இயேசுவின் வாழ்வையும், அவரது சிலுவையையும், நமதாக்கி நமது வாழ்கைப் பயணத்தில் வரும் துன்பங்களுக்கும், சிலுவைகளுக்கும், அர்த்தம் உண்டு என்பதனை உணர அழைக்கும் காலம் இந்த தவக்காலம். நமது குடும்ப உறவுகளையும் மனித மாண்புகளையும் இறைவனோடு உள்ள நமது அன்பையும் புதுப்பித்துக் கொள்ள நம்மை அழைக்கும் காலமிது.

இயேசுவின் இலட்சிய பயணம் சிலுவையோடு, மரணத்தோடு முடிந்து விடவில்லை. அது அவரது உயிர்ப்பிலே முழுமையடைந்தது. எனவே நமது செபங்களும், ஒறுத்தல்களும், தவக்கால பக்தி முயற்சிகளும் கல்லறையோடு முடிந்து விடாமல் நமது உயிர்ப்பு என்னும் விடியலை நோக்கித் தொடர்ந்து சென்றிட இந்தத் தவக்காலத்தை தொடங்குவோம், வாழ்வோம்.

**மரீனா அந்தோனிப்பிள்ளை**




### ‘அன்பின் மகிழ்ச்சி’ திருத்தூது அறிவுரை மடலின் 10-வது ஆண்டு

முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதிய அன்பின் மகிழ்ச்சி என்ற திருத்தூது அறிவுரை மடலின் 10-வது ஆண்டு நிறைவு விழாவுக்காக அனுப்பியுள்ள செய்தியொன்றில் கத்தோலிக்கத் திருஅவைக்குள் குடும்ப வாழ்க்கை, மேய்ப்புப்பணி பொறுப்பு மற்றும் ஒன்றிணைந்த பயண உரையாடல் ஆகியவற்றில் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புக்கான அழைப்பொன்றையும் விடுத்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.



### மோதல்களைத் தவிர்க்க அமெரிக்கா & இஸ்ரேலுக்கு திருப்பீடம்

நான் நேரடியாக அமெரிக்க அதிபர் டிரம்பிடம் பேசினால், மத்திய கிழக்கில் இடம்பெற்று வரும் போரை எவ்வளவு விரைவில் நிறுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நிறுத்துங்கள், ஏனெனில் மோதல் அடுத்த கட்டத்திற்கு தீவிரமடையும் ஆபத்து மிக அருகில் உள்ளது என்றும், லெபனோனை அதன் போக்கில் விட்டுவிடுங்கள் என்று கூறுவேன் எனவும் தெரிவித்தார் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின்.



### லெபனோன் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி

லெபனோனில் வன்முறை அதிகரித்து வரும் சூழலில் குழந்தைகள் கண்டிப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அதிகரிக்கும் பதற்றமான சூழ்நிலையை தணிக்கப்பட வேண்டும் என்றும் அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது யுனிசெஃப் நிறுவனம்.



### வன்முறையை நியாயப்படுத்தப் போலி-மத மொழி

பேராயர் பியர்பத்திஸ்தா பித்தசபாலா அவர்கள் தனது செய்தியில், வன்முறை என்பது பேரச்சத்தையும் வெறுப்பையும் மட்டுமே உருவாக்கும் என்று கூறியுள்ள பேராயர் பித்தசபாலா அவர்கள், போருக்கு எதிராக, திருஅவைத் தொடர்ந்து குரல் எழுப்ப வேண்டும் என்றும்வலியுறுத்தியுள்ளார்.



### உயிர்த்தெழுதலையும் எதிர்நோக்கையும் தழுவிக்கொள்வோம்!




மதச் சுதந்திரம், மனச்சான்றின்படி செயலாற்றுதல் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றிற்காகத் தன் வாழ்நாள் முழுவதும் ஆற்றிய பணிகளை கௌரவிக்கும் விதமாக, அமெரிக்க தேசிய அரசியலமைப்பு மையம் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களுக்கு சுதந்திரப் பதக்கத்தை வழங்குவதாக அறிவித்துள்ளது.




திருத்தந்தை தனது உரையில், கருத்தியல் ரீதியாகப் பிளவுபட்டுள்ள இன்றைய உலகில், பல்வேறு கலாச்சாரக் கண்ணோட்டங்களை முன்வைப்பதற்கும், ஆக்கபூர்வமான உரையாடல்களை ஊக்குவிப்பதற்கும் வுப2 செய்தி நிறுவனம் கொண்டுள்ள வலிமையைப் பாராட்டினார் திருத்தந்தை. மேலும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தகவல் தொடர்பில் உள்ள மனிதத்தன்மையை மறைத்துவிடக் கூடாது என்று எச்சரித்த திருத்தந்தை, செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஊடகங்கள் மனித மதிப்பீடுகளுடன் ஒத்துப்போகும் வகையில் முறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டினார்.

## கனடாவில் நிரந்தரமாக வாழ கனடா அரசு வழங்கும் இலகு நிரந்தர வதிவிட வீசா திட்டம். 31 பங்குனி 2025 ஆரம்பம்

கனடா குடியரசு தினத்தை முன்னிட்டு பல சலுகைகளை கனடா அரசு உலகம் முழுதும் வாழும் மக்களுக்கு அள்ளிவழங்க முன்வந்துள்ளது. அதில் குறிப்பாக கனடாவின் குடிவரவுதிணைக்களம் உலகில் வாழும் எந்த மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு இலகு நிரந்தர கனடா வதிவிட அனுமதிமுறையை பங்குனிமாதம் 31ம் நாள 2025 அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சலுகையை அனைவரும் பெற்று வாழ்வாங்கு வாழ "தமிழ் கத்தோலிக்க இணைய தலைமையை தொடர்பு கொள்ளவும

தகவல்: தோமஸ் டேவிட்




கனடா புனித சிசிலியா தமிழ் பாடகர் குழுவினரால், ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மெய்யியல் ஊடாக, (Zoom), உலகின் எந்தப்பகுதியிலிருந்தும் பங்குபற்றி, பாடல்கள் பாடி, பலரும் மன ஆறுதல் பெறும் வகையில் கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறும் இவ் நிகழ்வில் பங்குபெற அழைக்கின்றோம். **(மரீனா அந்தோனிப்பிள்ளை)**



**புனித கன்னி மரியாளின் கணவரான புனித சூசையப்பர் திருவிழா.**

ஆண்டின் பங்குனி 19ம் நாள் வருகின்ற இந்த விழா, புனித சூசையப்பர் யார், மரியாள் யார், குறிப்பாக இயேசு யார் என்பதைப் பற்றி மிக அதிகமாகச் சொல்கிறது. புனித சூசையப்பர், தொழிலாளர்கள், மரணப்படுக்கையில் இருப்பவர்கள், தந்தையர்கள் ஆகியோரின் பாதுகாவரான புனிதர் ஆவார், ஆனால் 1870-ல், திருத்தந்தை ஒன்பதாம் பயஸ், புனித சூசையப்பரை திருச்சபையின் பாதுகாவலரான புனிதராகவும் காப்பாளராகவும் அறிவித்தார்.

இன்றைய திருவிழா புனித சூசையப்பரின் பாதுகாவல் அருளைக் கொண்டாடுகிறது, மேலும் திருச்சபை அவருடைய பரிந்துரையையும் பாதுகாப்பையும் வேண்டுகிறது. புனித சூசையப்பர் மரியாளின் கணவராக அழைக்கப்பட்டார், (மத்தேயு 1:16, 18-21, 24). அவ்வாறு ஏற்றுக்கொண்டதன் மூலம், தன் மகனான இயேசுவைப் பொறுப்பேற்றுப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

இயேசுவின் பிறப்பிற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் முழுப் பொருளையும் அறியாதிருந்தபோதிலும், தாயையும் குழந்தையையும் பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் மூலம், புனித சூசையப்பர் அவர்கள் கடவுளின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தது மட்டுமல்லாமல், கடவுளின் சித்தத்தை அன்புடன் நிறைவேற்றினார் என்பதையும் காட்டினார்.

இந்தத் திருவிழாவைக் கொண்டாடும் வேளையில், திருச்சபைத் தந்தையர்களும் பணியாளர்களும் புனித சூசையப்பரை தங்கள் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும், மரணப்படுக்கையில் இருப்பவர்கள் அவருடைய சக்திவாய்ந்த பரிந்துரைக்காக அவரை நாட வேண்டும் என்றும் இந்த விழா அழைப்பு விடுக்கின்றது..

மேலும், திருச்சபையின் புனித மறைபொருட்களின் பாதுகாவலர்களான குருக்களும் புனித சூசையப்பரை தங்கள் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும், புனித சூசையப்பர் மரியாளையும் இயேசுவையும் பாதுகாத்து பராமரித்ததைப் போலவே அவர்களும் திருச்சபையைப் பாதுகாத்து பராமரிக்க வேண்டும் என்றும் இந்த வழா அழைப்பு விடுக்கின்றது..

குறிப்பாக, இன்றையு நவீன குடும்பங்கள் சமாதானம், அமைதி இழந்து வாழ்கின்றார்கள். பிள்ளைகள் தாம் விரும்பியவாறு வாழ முற்படுகிறார்கள். குடும்பங்களிலே புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்து வாழும் மனப்பக்குவம், ஒருவர் மற்றவரை அவர்களுடைய குறைகளோடு ஏற்றுக்கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தும் பண்பு இன்று அறவே அற்றுபோய்விட்டது. புனித சூசையின் புரிந்துணர்வு திருக்குடும்பத்தை மகிமைக்கு இட்டுச்சென்றது. எங்கள் குடும்பங்களும் திருக்குடும்பங்களாக மாறிட புனித சூசையப்பர் மூலம் ஜெபிப்போம். திருக்குடும்பங்களாவோம்.

(டாக்டர் போள் ஜோசவ்)




(புனித கிளாரம்மாள் சபையைச் சேர்ந்த முத்மதலேன் என்ற கன்னிகைக்கு கீழ் வரும் வெளிப்படுத்தல் அருளப்பட்டது. இவர் உரோமையில் வாழ்ந்தவள்)

இயேசு மரிப்பதற்கு முந்திய இரவில் அவர் பூங்காவனத்தில் பிடிபட்ட பின் வெளியில் தெரியாமல் அவருக்கு செய்யப்பட்ட இரகசிய உபாதைகளைப் பற்றி தனக்கு கொஞ்சம் வெளிப்படுத்தும்படி முத்மரிய மதலேன் நமதாண்டவரிடம் அன்போடு கேட்டு வந்தாள். அவளுடைய விருப்பத்தை ஆண்டவர் ஏற்றுக்கொண்டு பின்வருமாறு அவளிடம் கூறினார்.

உலகத்திலுள்ள சகல மனிதர்களையும் விட அதிக ஈனமானவன் நான்தான் என்று யூதர்கள் கருதினார்கள். ஆகவே அவர்கள்

1. என் கால்களை கயிற்றால் கட்டிவிட்டு கற்படிக்கட்டுகளின் படிகள் வழியாக என்னைக் கீழே இழுத்துக்கொண்டு போய் அசுத்தமான குமட்டுகிற நிலவறையில் தள்ளினார்கள்.

2. என் வஸ்திரங்களை கழற்றி விட்டு கணுக்கள் உள்ள இரும்பால் என் தேகத்தைத் தேள் கொட்டுவது போல் நையப்புடைத்தார்கள்.

3. என்னை மண்ணில் கிடத்தி என் உடம்பை சுற்றி கயிற்றைப் போட்டு அதன் இரு ஓரங்களையும் பிடித்து தரையில் என்னை இழுத்துக் கொண்டு போனார்கள்.

4. உருவக்கூடிய முடிச்சு போட்டு என்னைக் கட்டி ஒரு மரக்கட்டையில் தொங்க விட்டார்கள். முடிச்சு உருவி அவிழ்ந்த போது நான் கீழே விழுந்தேன். இந்த வாதையின் கொடுமை தாங்க முடியாமல் நான் இரத்தக் கண்ணீரால் அழுதேன்.

5. என்னை ஒரு கம்பத்தில் கட்டி வைத்து பற்பல ஆயுதங்களைக் கொண்டு என் தேகத்தில் குத்தினார்கள்.

6. கற்களைக் கொண்டு என்னை அடித்தார்கள். தணலைக் கொண்டும் என்னைச் சுட்டார்கள்.

7. செருப்புத்தைக்கிற ஊசியால் என்னைக் குத்தித் துளையிட்டார்கள். கூரிய ஈட்டிகளால் என் தோளையும் சதையையும் கீறி இரத்த நரம்புகளைக் கிழித்தனர்.

8. அவர்கள் என்னை ஒரு கம்பத்தில் கட்டி காய்ச்சப்பட்ட உலோகத்தகட்டில் வெறுங்காலாக நிற்க வைத்தார்கள்.

9.ஒரு இரும்புத் தொப்பியை என் தலை மேல் வைத்து மிக மோசமான அசுத்தம் படிந்த கந்தையால் என் கண்களைக் கட்டினார்கள்.

10. கூர்மையான ஆணிகளால் நிறம்பிய ஒரு நாற்காலியில் என்னை உட்கார வைத்தார்கள். இதனால் ஆழமான காயங்கள் ஏற்பட்டது.

11. என் உடலிலுள்ள இக்காயங்களில் காய்ச்சிய ஈயத்தையும் குங்குலியத்தையும் ஊற்றினார்கள். இந்த வாதனைக்குப்பின் மறுபடியும் என்னை அந்த ஆணி நாற்காலியில் உட்காரச் செய்ததால் ஆணிகள் மேலும் ஆழமாக சதைக்குள் சென்றது.

12. வெட்கமும் வேதனையும் எனக்கு உண்டாகும் படியாக என் தாடி முடிகளைப் பிடுங்கிய துவாரங்களில் ஊசிகளை ஏற்றினார்கள். பின்னர் என்னை புறங்கை கட்டி அந்த நிலவறைச் சிறையில் என்னை அடித்து குத்திக் கொண்டே வெளியே நடத்திக் கொண்டே போனார்கள்.

13. அவர்கள் என்னை ஒரு சிலுவை மேல் கிடத்தி அதிலே இறுக்கமாக என்னைக் கட்டினார்கள். என்னால் மூச்சு விட முடியவில்லை.

14. நான் அப்படித் தரையில் கிடக்கும் போது என் தலையில் மிதித்தார்கள். என் உடல் மேல் ஏறி நடந்தார்கள். இதனால் என் மார்பகங்கள் காயப்பட்டன. ஒரு முள்ளை எடுத்துக் கொண்டு என் நாவினுள் குத்தி செலுத்தினார்கள்.

15. அவர்கள் என்னைப் பற்றி ஆபாசமான வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே என் வாய்க்குள் மிக அசிங்கமான மனித கழிவுப் பொருட்களை ஊற்றினார்கள். இதன் பின் இயேசு இந்த சகோதரியை பார்த்து கூறுவார்:

என் மகளே! இந்த பதினைந்து கொடுமைகளையும் மதித்து வணங்கும் படியாக இவைகளை நீ எல்லோருக்கும் அறிவி. யார் யார் ஒவ்வொரு நாளைக்கு இவற்றில் ஒரு வாதனையையேனும் அன்போடு எனக்கு ஒப்புக்கொடுத்து பின்வரும் ஜெபத்தைச் சொல்வார்களோ, அவர்களை நடுத்தீர்வை நாளில் நித்திய மகிமையால் சன்மானிப்பேன் என்றார்.

**ஜெபம்**

என் ஆண்டவரே என் தேவனே! தேவரீர் உம்முடைய விலையேறப்பெற்ற திரு இரத்தத்தைச் சிந்திய இப்பதினைந்தின், மேலும் பல இரகசிய வாதைகளை மகிமைப்படுத்துவது என்னுடைய விருப்பம். சமுத்திரங்களில் எத்தனை மணல் பரப்புக்கள் இருக்கின்றனவோ, வயல்களில் எத்தனை தானிய மணிகள் உள்ளனவோ, பூமியின் மேடுகளில் எத்தனை புல் இலைகள் காணப்படுகின்றனவோ, சோலைகளில் எத்தனை கனிகள் உள்ளனவோ, மரங்களில் எத்தனை மலர்கள் பூக்கின்றனவோ, வானத்தில் எத்தனை சம்மனசுகளோ, பூமியில் எத்தனை சிருஷ்டிகளோ, அத்தனை ஆயிரம் தடவைகள் தேவரீர் மகிமை பெறுவீராக!

ஓ! மகா அன்புக்குப் பாத்திரமான ஆண்டவராகிய இயேசுவே! உம்முடைய மகா பரிசுத்த இருதயமும் உம்முடைய விலையேறப்பெற்ற திரு இரத்துமும், மனுக்குலத்திற்காக நீர் கொடுத்த தெய்வீகப்பலியும், மிகப் பரிசுத்தமான பீடத்தின் தேவதிரவிய அனுமானமும் மிகவும் பரிசுத்த கன்னிகையான மரியாளுடையவும் நவ விலாச சம்மனசுகளுடையவும் ஆசீர்வதிக்கப்பட்ட புனிதர்களின் வரிசைகளுடையவும், என்னுடையவும் சகலருடையவும் மகிமையையும் புகழையும் உயர்வையும் பெறுவீராக. இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் நித்திய காலமும் பெறுவீராக ஆமென்.

***(இப்பக்தி முயற்சி 2ஆம் கிளமென்ட் என்னும் பாப்பானவரால் 1730 -1740 அங்கீகரிக்கப்பட்டது)***

***(தோமஸ் மரியாள்)***





துன்பங்களில் நம் எல்லாருக்கும் முன்மாதிரி எம் ஆன்மீகத் தாய் வியாகுல அன்னை. நம்மைப் போன்ற ஒரு சாதாரணக் குடும்பப் பெண்ணாகிய மரியாள் குடும்பத்தில் இன்று நாம் எதிர்கொள்ளும் அனைத்தையும் அனுபவித்தவள். உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்ற சிமியோனின் வாக்கு அவர் இயேசுவை கருத்தாங்கிய நாளிலே தொடங்கி விட்டது. அது இயேசுவின் கல்வாரிப் பலியிலும், இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பின்பும் தொடர்ந்தது. குழப்பமான சூழ்நிலைகள் பலவற்றை தாய் மரியாள் தன் வாழ்வில் சந்தித்தார். திருவிவலிய சான்றுள்ள அன்னை அனுபவித்த ஏழு சோகங்களை திருஅவை எமக்கு தந்திருக்கின்றது. அவைகளைப் பார்ப்போம்.

1. உமது உள்ளத்னதயும் ஒரு வாள் ஊடுருவி பாயும் (லூாக் 2:35). 2. இயேசுவைக் காப்பாற்றும் பொருட்டு எகிப்துக்கு தப்பிச்செல்லுதல் (மத் 2:13-15). 3. காணாமல் போன இயேசுவைக் கண்டடைந்தது (லூாக் 2:46) 4. சிலுவை சுமந்து சென்றபோது தாயும் மகனும் சந்தித்தது. 5. இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர்விட்டது. 6. இயேசுவின் உடலை தாய் மரியாவின் மடியில் கிடத்தியது. 7. இயேசுவின் உடலைக் கல்லறையில் அடக்கம் செய்தது (லூாக் 23:53)

வாழ்வின் இந்தக் குழப்பமான, துன்பமானச் சூழ்நிலைகளில் நாம் மரியாளிடமிருந்து கற்றுக் கொள்ள ஏராளமான பாடங்கள் உள்ளது. ஏழு வியாகுலங்களின் தாய் நமக்கு ஏழு படிப்பினைகளைக் கற்றுத்தருகிறார்.

1. துன்பம் மீட்பின் மறைபொருள். நமது துன்பத்திற்கான காரணம் ஒருவேளை நமக்கு நாம் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் போது வெளிப்படையாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் அதுவே நம்மை மீட்கும் ஆயுதம்.

2. துன்பத்தில் தான் மரியாள் தனது சீடத்துவத்தை நிறைவு செய்தார். நாம் இயேசுவின் உண்மையான சீடர்கள் என்றால் அன்றாடம் அன்னை மரியாள் போன்று நம் துன்பச் சிலுவைகளை மனத்துணிவுடன் உள்ளார்ந்த விருப்பத்துடன் தூக்கிக் கொண்டு அவர் பின் செல்ல வேண்டும்.

3. நாம் சந்திக்கும் ஒவ்வொரு வேதனையும் கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்கெடுப்பதற்கு கடவுள் நமக்கு கொடுத்திருக்கும் வாய்ப்பாக உணர்வோம். அவரது பாடுகளில் குறைவானதை நாம் நிறைவு செய்கிறோம் (கொலோ 1:24) என்ற உணர்வைப் பெற்றுக் கொள்வோம்.

4. சிலுவையடியில் நிற்கும் துணிவை ஆண்டவர் மரியாளுக்குக் கொடுத்தது போல துன்பங்களைச் சந்திக்கும், ஏற்றுக் கொள்ளும் மனத்துணிவை நமக்கும் கொடுத்துள்ளார் என்பதை உணர்ந்து முழுத்துணிவுடன துன்பங்களை எதிர்கொள்வோம்.

5. எனக்குத் துன்பம் விளைந்தது எனது நன்மைக்காகவே. அதனால் உம் விதிமுறைகளை நான் கற்றுக் கொண்டேன் (திபா 119:71) என்ற திருப்பாடல் ஆசிரியரின் நேர் நிலை மனநிலையை நாம் பெற்றுக் கொள்வோம்.

6. அன்னை மரியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்து புரட்டாசி 4ஆம் தகதி புனிதர் பட்டம் பெற்றுள்ள அன்னை தெரசாள் போல பிறர் நலனுக்காகத் துன்பங்களைத் தாங்கும் பேறுபெற்றவர்களாக வாழ்வோம். பிறரின் துன்பங்களில் நாம் பங்கெடுப்பதால், நம் சுமைகளைச் சுமக்க வலிமை பெறுகிறோம். பிறர் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பதால் நம் வாழ்வுக்கு அர்த்தம் கிடைக்கின்றது.

7. துன்பம் நம்மைத் தூய்மைப்படுத்துகிறது. நமது விசுவாசத்தை ஆழப்படுத்துகிறது. ஆண்டவர் என் துன்பத்தைக் களிநடனமாக மாற்றுவார் என்ற எதிர்நோக்கை நமக்குள் விதைக்கிறது. இறைபராமரிப்பின் இளைப்பாறுதலை நமக்கு வழங்குகிறது. ஒட்டு மொத்தத்தில் நமது ஆன்மீக வாழ்வில் பால்குடி மகவாக இருக்கும் நம்மை திட உணவு உட்கொள்ளும் நிலைக்கு வளர்ச்சியடையச் செய்கிறது. மரியாள் தனது ஏழு துயர்களின் வழி நமக்குக் கற்றுத்தரும் இந்த வாழ்க்கைப்பாடங்களை நாம் பின்பற்றி அவர்வழி நடப்போம்.

**அருட் பணி குயின்ரஸ்**



# சுருக்கமான சிலுவைப்பாதை

முன்னுரை

விண்ணகத் தந்தாய், கல்வாரியை நோக்கிப் பயணம் செய்த உம் திருமகனுடன் நான் இப்பயணத்தைத் தொடங்குகிறேன் . என் மீது உமக்குள்ள அன்பையும் அக்கறையையும் நான் காணச் செய்வீராக.

## முதலாம் ஸ்தலம்:

### இயேசுவைப் பிலாத்து சாவுக்குத் தீர்ப்பிடுகிறான்

இயேசுவே, கெட்ட மனிதர்கள் உமக்கு அநியாயமாகத் தீர்ப்புக் கூறினார்கள். ஏனெனில் நீர் செய்த நன்மைகளைக் கண்டு அவர்கள் பொறாமை கொண்டார்கள் .இந்தத் தீர்ப்பு உமக்கு மிகுந்த வேதனை அளித்தது. என்னை தவறாக தீர்ப்பிடினும் உம்மைப் போல் பொறுமையுடன் ஏற்றுக்கொள்ள வரம் தாரும், ஆமென்.

செபம் : இயேசுவே, நீர் நல்லவர். உம் விரோதிகள் நீர் நல்லவர் என்று ஏற்றுக் கொள்ள மறுத்தனர். நான் சொல்வதை அவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பாதபோது நான் மடியாதிருக்கத் தேவையான வலிமையைத் தருவீராக . ஆமென் .

## இரண்டாம் ஸ்தலம்:

### இயேசு சிலுவையை ஏற்றுக் கொள்கிறார்

இயேசுவே அகில உலகின் பாவங்களையும் நீர் சுமக்க வேண்டியிருந்தது. நான் சுமக்க வேண்டியிருக்கும், பாரச்சுமைகளைப் பற்றி நான் முறையிடுவது போல் நீர் முறையிடவில்லை . அவர்கள்மீது நான் காட்ட வேண்டிய அன்பைச் சுடு சொற்களால் பாழாக்குகிறேன் . நீரோ உமக்கு எங்கள் மீதுள்ள அன்பை அன்புடன் எண்பிக்கின்றீர் .செபம் : நான் அயலாருக்கு அன்புடன் சேவை செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களில் நான் முறுமுறுக்காதிருக்க உதவி செய்வீராக . உமது சிலுவையைச் சுமப்பதை நான் வாழ்வின் மகிழ்ச்சியாகக் கருத்துவேனாக . ஆமென்

## மூன்றாம் ஸ்தலம்:

### இயேசு சிலுவையின் கீழே விழுகிறார்

இயேசுவே நீர் எங்களைப் போல் மனிதனே. எனவே உமது பலத்துக்கும் எல்லை உண்டு. இரவு முழுவதும் நீர் உறங்கவில்லை. உம்மை வதைத்தார்கள் . நீர் சினங்கொள்ளவில்லை . உதவியுடன் நீர் எழுந்து வழிநடந்தீர். நானோ விழும் பொழுது அல்லது ஒரு தப்புச் செய்யும்போது கோபிக்கிறேன்.

செபம் : இயேசுவே, நான் தவறு செய்யும் பொழுது, என்னைக் குணமாக்குவீராக. நான் பாவத்தில் விழுந்தால் எழுந்து உம்மிடம் மன்னிப்புக் கேட்டு வழிநடக்க உதவி செய்வீராக . ஆமென் .

## நான்காம் ஸ்தலம்:

### இயேசு தம் தாய் மரியன்னையை சந்திக்கிறார்

இயேசுவே நீர் படும் வேதனைகளை உம் அன்னை கண்டபொழுது நீர் மிகுந்த துயரப்பட்டீர் . அவளது துயரத்தை உம்மால் தாங்க முடியவில்லை . இது அடிக்கடி நேரிடுகிறது. பிள்ளைகள் வீட்டையும் பெற்றோரையும் விட்டுப் பிரிகையில் பெற்றோர் மிக வருந்துகின்றனர் .

செபம் : இயேசுவே, எனக்கு இந்த நிலை ஏற்படும் பொது சரியானதைச் சொல்ல, செய்ய எனக்கு உதவி செய்வீராக . நீர் சங்கடப்படுவதைக் கண்ட அன்னை துயரப்படுகையில் நீர் உம் அன்னை மீது கொண்டிருந்த அன்பை எனக்கும் தருவீராக . ஆமென் .

**ஐந்தாம் ஸ்தலம்:**

**இயேசு சிலுவை சுமக்க சீமோன் உதவுகிறார்**

இயேசுவே, உமக்கு உதவி தேவைப்பட்டது. உமது சீடரில் ஒருவரோ நண்பனோ உதவி செய்ய வரவில்லை. அந்நியன் உமக்கு உதவி செய்கிறான் . சீமோன் நல்ல மனதுடன் உதவி செய்தானா ? எனினும் அவனது உதவியைத் தாழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டீர்.

செபம் : இயேசுவே, வாழ்வில் எனக்கு உதவி செய்ய நீர் பலரை அனுப்புகிறீர் . இதற்காக நான் உமக்கு நன்றி சொல்வேனாக . அவர்கள் எனக்கு உதவியாயிருந்தாலும் உபத்திரவமாயிருந்தாலும் நான் உமக்கு நன்றி சொல்வேனாக . ஆமென் .

**ஆறாம் ஸ்தலம்:**

**இயேசுவின் முகத்தை ஒரு பெண் துடைக்கிறாள்**

இயேசுவே, உமது கல்வாரிப் பயணத்தில் முதலில் உமது தாய் உதவியாயிருந்தாள் . இரண்டாவது சீமோன், மூன்றாவது இந்தப் பெண். இந்தப் பெண் துணிச்சலோடு உமக்கு உதவ வந்தாள். வாழ்வு தரும் உமது பிரசன்னத்தை துணியில் பதித்து கொடுத்தீர்.

செபம் : இயேசுவே, பிறர் எனக்கு உதவி செய்ய வருகையில் நான் அதை ஏற்றுக்கொள்ளத் துணை புரிவீராக . அவர்களது உதவி எனக்கு அதிக உதவி செய்யாவிட்டாலும் நான் நன்றியுள்ளவனாக இருக்கத் துணை புரிவீராக . ஆமென் .

**ஏழாம் ஸ்தலம்:**

**இயேசு திரும்பவும் கீழே விழுகிறார்**

இயேசுவே, நீர் திரும்பவும் விழுகிறீர் . நீர் முறையிடவில்லை . பகைவர்கள் என்ன நினைப்பார்கள் கவலைப்படுகிறேன், உமக்கெதிராக கூட முறையிடுகின்றேன்.

செபம் : நீர் தரையில் விழுந்தபொழுது அப்படியே கிடக்கவில்லை. பலத்தையெல்லாம் திரட்டி எழும்புகிறீர். அதே மன வலிமையை எனக்கும் தாரும். நான் விழுவதைக் கண்டவர்கள் என்ன நினைப்பார்கள் என்று நான் அதிகக் கவலைப்படலாகாது . எழுந்து நடப்பதற்கான மனத்திடனை எனக்கு எப்பொழுதும் தாரும் . ஆமென்

**எட்டாம் ஸ்தலம்:**

**இயேசுவுக்கு ஜெருசலேம் பெண்கள் கண்ணீர் நிறை ஆறுதல்**

இயேசுவே , ஜெருசலேம் பெண்கள் உம்மைத் தேற்ற வருகிறார்கள். மீளாத்துன்ப வேளையிலும், “எனக்காக அழவேண்டாம, உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று ஆறுதல் அழித்தீரே! இயேசுவே இயேசுவே! ஆமைதி தேடி அலையும் நெஞ்சம் நான். அனுதின அமைதி தந்து என்னை ஆசீர்வதியும்.

செபம் : இயேசுவே, தம் அன்பைக் காண்பிக்காதவர்கள் என்னை மன நோகச் செய்தபோதிலும் நான் அன்போடு உதவி செய்வேனாக . என்னுடைய உண்மையான நண்பர்கள் என்னைக் கைவிட்டதாக நான் உணர்ந்தபோதிலும் நான் அவர்களுக்கு உதவி செய்வேனாக. ஆமென்

**ஒன்பதாம் ஸ்தலம்:**

**இயேசு மூன்றாம் முறை விழுகிறார்**

இயேசுவே , கல்வாரியின் பாதையில் நீர் பலமுறை விழுந்திருப்பீர் . எனினும் இதுபோதுமென நீர் ஒருபோதும் சொல்லவில்லை . நானோ இதுபோதுமெனக் கருதுகிறேன் .இயேசுவே ,நீர் என் அருகில் நின்று என்னைத் தேற்றுவீராக .

செபம் : இயேசுவே ,நான் மனம்மடிய விட்டுவிடாதேயும். உமது தைரியத்தையும் பலத்தையும் பற்றி பிடித்துக் கொள்வேனாக . இவ்விதம் நான் புதுப்பலம் பெறுவேனாக . ஆமென்

**பத்தாம் ஸ்தலம்:**

**இயேசுவின் உடைகளைக் கழற்றுகிறார்கள்**

இயேசுவே , இத்தகைய அவமானம் இதுவரை எனக்கு நேரிடவில்லை . ஆனால் எனது கீர்த்தியைப் பறித்திருக்கிறார்கள் . மக்கள் எனது குறைகளை மாத்திரம் கவனிக்கின்றனர் . என்னைப் பற்றி குறைகூறி என்னை நிர்வாணி போல் ஆக்குகிறார்கள் . நான் அவர்கள் முன் ஆடையற்றவனாகிறேன் .

செபம் : இயேசுவே , பிறர் என்னைக் குறைத்துப் பேசும்பொழுது நான் அதைப்பற்றி நினையாதிருக்கும் வரம் தாரும் . நான் எனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் அதற்கான தைரியத்தை எனக்குத் தாரும். என்மீது உமக்குள்ள அன்பை நான் நினைப்பேன். நான் வெட்கி நாண வேண்டுமென்று பிறர் உறுதி செய்து என்னைத் துன்புறுத்தும் போது, என்மீது உமக்குள்ள அன்பை நான் நினைப்பேனாக .

**பதினொராம் ஸ்தலம்:**

**இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்**

இயேசுவே, மூன்று ஆண்டுகளாக நீர் எங்கும் நன்மை செய்துகொண்டு சென்றீர் . இப்பொழுது உம்மைச் சிலுவையில் அறைந்து அதற்கு முடிவுகட்டிவிட்டார்கள்

செபம் : இயேசுவே , என் பலத்தை நான் அறிய உதவி செய்யும் . என்னை ஒன்றும் செய்ய இயலாதவனாக்குவார்களானால், நான் யார், நீர் எதற்காக என்னை உண்டாக்கினீர் என்பதை அறிவதற்கான பலத்தை எனக்குத் தாரும் . ஆமென்

**பன்னிரெண்டாம் ஸ்தலம்:**

**இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்**

இயேசுவே, உமது உயிரை உம் பரலோகத் தந்தையிடம் கையளித்து அமைதியாக மரணித்தீர். நானோ சாவுக்கு அஞ்சுகிறேன் . எனது வாழ்வின் இறுதியில் வரும் சாவை நினைத்தல்ல , ஆனால் ஒவ்வொரு நாளும் நான் அனுபவிக்கும் சிலுவைகளை நினைத்து அஞ்சுகிறேன். எனது வேலை போய்விட்டால் அல்லது ஒரு நண்பன் என்னைவிட்டு அகன்றால் நான் கைவிடப்பட்டதாக உணருகிறேன், கலங்குகின்றேன்.

செபம் : இயேசுவே , நான் பரலோகத் தந்தையிடம் நம்பிக்கை வைக்கலாம் என்பதைக் வெளிப்படுத்தி என்னை தைரியப்படுத்துவீராக . நீர் என்னைக் கைவிடமாட்டீர். உமது பிதா உமக்கு சாவுக்குப் பின் உமக்கு வாழ்வு அளித்தது போல், உமது உயிர்த்த வாழ்வில் எனக்குப் பங்கு அளிப்பீராக . ஆமென்

**பதின்மூன்றாம் ஸ்தலம்:**

**இயேசுவின் உடலைச் சிலுவையினின்று இறக்குகிறார்கள்**

இயேசுவே , நீர் மரணித்தீர் . நீர் வாழ்விலும் சாவிலும் நன்மை மட்டுமே செய்தீர். நீடிக்கும் நன்மை நான் சாகும் பொழுது நீடிக்கும் நன்மை ஏதாவது எனக்குப்பின் விட்டுச் செல்ல எனது சொற்களும் செயல்களும் நன்மை செய்ய அருள் தாரும்.. எனது செயலும் சொல்லும் நீடித்த நன்மை செய்ய இறைவன் இரக்கம் புரிவீராக.

செபம் : இயேசுவே , நான் மரணிக்கும் பொழுது என் சக மனிதர்களை நான் என்னால் இயன்ற அளவிற்கு அன்பு செய்திருக்க அருள் தாரும். இதனால் என் ஆன்மா அமைதியாக துயில்கொள்ளும்.

**பதிநான்காம் ஸ்தலம்:**

**இயேசு கல்லறையில் வைக்கப்படுகிறார்**

இயேசுவே, உம் வானாகத் தந்தையின் வல்லமை மூன்றாம் நாள் உம்மை எழுப்பும்வரை நீர் காத்திருந்தீர். இறைசித்தத்திற்காக காத்திருக்க, பலம் வாய்ந்த நம்பிக்கையைத் தாரும்.

செபம் : இயேசுவே, உம்மைப்போல, தந்தை தரும் முடிவில்லா வாழ்வுக்காக காத்திருப்பேன் . அப்பொழுது நீர் என்னுடன் இருப்பீராக . நான் உதவியற்ற நிலையில் இருக்கையில் நீர் அங்கு என்னுடன் இருந்து நான் நம்பிக்கையுடன் இருக்கச் செய்வீராக. எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். ஆமென்.

(CTC NETWORK)

## திருத்தந்தை : ஆயுதமற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த அமைதி



2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து வரும் அறிக்கைகளின்படி, திருத்தந்தை பதினான்காம் லியோ, ஆயுதமற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த அமைதியைத் தனது போதனையின் மையத் தூணாக ஆக்கியுள்ளார். குறிப்பாக, 59வது உலக அமைதி தினத்திற்கான (ஜனவரி 1, 2026) தனது செய்தியிலும், புதன்கிழமை பொது சந்திப்புகளின் போதும் இந்தக் கருப்பொருளை அவர் முன்னிலைப்படுத்தியுள்ளார்.

ஆயுதக்குறைப்பு குறித்த திருத்தந்தையின் செய்தியின் முக்கிய அம்சங்கள்:

ஆயுதமற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த அமைதி: கிறிஸ்தவ அமைதியை, அச்சம், அச்சுறுத்தல்கள் அல்லது ஆயுதங்களை அடிப்படையாகக் கொண்டிராத ஆயுதமற்றது என்றும், மோதல்களைத் தீர்க்கவும், இதயங்களைத் திறக்கவும், பரஸ்பர நம்பிக்கையை வளர்க்கவும் திறன் கொண்ட ஆயுதங்களைக் களைந்த என்றும் திருத்தந்தை வரையறுக்கிறார்.

இதயத்தையும் மனதையும் ஆயுதமற்றதாக்குதல்: புனித இருபத்திமூன்றாம் யோவானின் மரபிலிருந்து உத்வேகம் பெற்று, ஆயுதப் போட்டியை நிறுத்த, உண்மையான ஆயுதக்குறைப்பு தனிநபர்களின் இதயங்களிலும் மனங்களிலும் உள்ளிருந்தே தொடங்க வேண்டும் என்று திருத்தந்தை பதினான்காம் லியோ வலியுறுத்துகிறார்.




அமரர் இம்மானுவல் இயேசுதாசன் ஒரு சட்டத்தரணியும், சமூக சேவவையாளரும், குறிப்பாக கத்தோலிக்க திருஅவைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து, நல் விசுவாச வாழ்வை வாழ்ந்தவரும் ஆவார்.

அன்னார், திருமறைக்கலாமன்ற கனடா கிளையின் ஸ்தாபகரும், முதல் தலைவரும் ஆவார். அன்னார், தமிழ் பாரம்பரிய நாட்டுக்கூத்து கலைஞரும், ஒரு சிறந்த நடிகரும், எழுத்தாளரும் ஆவார். அன்னார் முதியோர்களுக்கான உளவள ஆலோசகராகவும் வேவையாற்றினார்.

அமரர் மனுவல் இயேசுதாசனுடைய வாஞ்சையுள்ள கத்தோலிக்க விசுவாச வாழ்வு அன்னாருக்கு இவருக்கு பரலோக கதவுகள் திசக்கப்பட்டு நிலையான வாழ்வை பெற்றுக்கொடுக்கும் என்பதை நான் நம்புகின்றேன்.

(ஆசிரியர் டேவிட் தோமஸ்)




**வன்முறையை நிராகரித்தல்,**
**அன்பு மற்றும் நீதி மூலம்**
**அமைதியைக் கட்டியெழுப்புதல்,**
**மற்றும் மோதலைக் குறைக்கும்**
**வாழ்க்கை முறையில்**
**இதை உள்ளடக்குதல்**










# CANADA TAMIL CATHOLIC NETWORK SERVICE

## கனடா தமிழ் கத்தோலிக்க வெளியீட்டக இணையம்

### செயற்பாடுகள்

01.சகல அரசசாசன விண்ணப்பங்கள் அனைத்தும் இங்கே நிரப்பிக்கொடுக்கப்படும்
02. குடியகல்வு குடிவரவு தொடர்பான வேலைகள் செய்துகொடுக்கப்படும்
03. "அன்பு மக்களே" சஞ்சிகை வெளியிடல்
05. புனித ஸ்தலங்களுக்கான யாத்திரை பயண ஒழுங்குகள் மேற்கொள்ளல்
06. வாரம்தோறும் பரம்பொருள் வானொலி நிகழ்வு
07. ஆன்மீக நிகழ்வுகள் விசேட நிகழ்வுகள் விளம்பரங்கள் ஒளிபரப்பு செய்யப்படும்
08. ஞானொடுக்கம் தியானம் கருத்தரங்குகள் நடாத்துதல்
09. ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு
10. ODSP: ONTARIO DISABILITY SUPPORT PROGRAMME
11. social assisiance (welfare)
12. volunteer support

### COUNSELLING

01. குடும்ப பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்கும் குடும்ப உளவளத்துணை
போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகி வாழும் அனைவருக்குமான உளவளத்துணை

**உங்கள் தொடர்புகளுக்கு**
**647 - 852 - 3141**

